IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.92/2022

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | THANGARASU |
| FATHER'S NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | SEMPALLI |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 24th day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சேம்பள்ளி பகுதியில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். கடந்த 10.05.2021 அன்று இரவு 07.00 மணியளவில் நான் குடியாத்ததில் இருந்தபோது எங்கள் தெருவை சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் போன் செய்து எனது வீட்டில் எனது அம்மா, அப்பாவை சுந்தரமூர்த்தி மற்றும் ஐயப்பன் இருவரும் அசிங்கமான வார்த்தையால் திட்டி செருப்பால் அடித்தார்கள் என்றும், எனது அம்மா, அப்பா மற்றும் எனது மனைவியை வீட்டில் வைத்து பூட்டி வைத்திருப்பதாகவும், உடனே வரசொல்லி தகவல் சொன்னார். நான் காவல் நிலையத்திற்கு சென்று எனது அம்மா, அப்பாவை அடித்தற்காக புகார் அளித்து போலிசாரை என்னுடன் வரசொல்லி கேட்டேன். யாரும் வராததால் நான் எனது வீட்டிற்கு சென்று ஆஜர் எதிரிகள் சுந்தர மூர்த்தி மற்றும் ஐயப்பன் ஆகியோரிடம் எதற்காக எனது அம்மா, அப்பாவை அடித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஐயப்பன் கடப்பாறையால் அடிக்க முயன்றபோது எனது கையில் அடித்து முன்னந்தலையில் பட்டு காயம் ஏற்பட்டது. அதன் பின்பு நான் மயக்கமடைந்ததால் ராஜா என்பவர் என்னை குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்த்தார். எனது தலையில் ஏற்பட்ட காயத்திற்கு 7 தையல் போடபட்டது. பின்னர் நான் 11.05.2021 அன்று நான் மருத்துவமனையில் புகாரை எழுதி கையொப்பமிட்டு எனது அப்பாவிடம் காவல் நிலையத்தில் அளிக்கசொல்லி கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.92/2022

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | KRISHNAMMAL |
| HUSBAND NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | SEMPALLI |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 24th day of September 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சேம்பள்ளி பகுதியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பங்காளிகள் ஆவார்கள். கடந்த 10.05.2021 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் நானும், எனது கணவரும் இருந்தபோது ஆஜர் எதிரி சுந்தரமூர்த்தி மற்றும் ஐயப்பனும் அங்கு வந்து என்னையும் எனது கணவரையும் அசிங்கமாக திட்டி செருப்பால் அடித்தனர். பின்னர் எனது ஊர்க்காரர்கள் யாரோ எனது மகனுக்கு தகவல் சொல்லி இரவு சுமார் 08.30 மணியளவில் எனது மகன் வீட்டிற்கு வந்து சுந்தரமூர்த்தியிடம் எதற்காக எனது அப்பா அம்மாவை அடித்தீர்கள் என்று கேட்டபோது சுந்தரமூர்த்தியும், அவரது மனைவியும், எனது மகனின் தலைமுடியை பிடித்து கொண்டனர். ஐயப்பன் அவரது வீட்டில் இருந்து கடப்பாறையை எடுத்து வந்து எனது மகனின் தலையில் அடித்தார். எனது மகனை கடப்பாறையால் அடித்தபோது ஏதோ ஒரு பொருளை வைத்து எனது கணவரின் மார்பில் அடித்துவிட்டதாக எனது கணவர் சொன்னார். பின்னர் எனது மகனை, எனது மருமகன் ராஜா என்பவர் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். பின்னர் எனது மகனும், மருமகனும் வீட்டிற்கு வருவதற்கு முன்பே காவல் நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு வந்ததாக சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.